# BSNL ஊழியர் சங்கம்

**தமிழ் மாநிலம்**

**சுற்றறிக்கை எண்: 141** **தேதி: 18.06.2014**

**சென்னை மாநில செயற்குழு முடிவுகள் (17.06.2014)**

தமிழ் மாநில சங்கத்தின் செயற்குழு கூட்டம் சென்னையில் 17.06.2014 அன்று மாநில உதவி தலைவர் தோழர் P.இந்திரா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக BSNL ஊழியர் சங்க கொடியினை இம்மாதம் பணிஓய்வு பெற இருக்கின்ற தூத்துக்குடி மாவட்ட செயலர் தோழர் P.ராமர் எழுச்சி மிகு கோஷங்களுக்கிடையில் ஏற்றி வைத்தார். உழைப்பாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் R.உமாநாத், KG போஸ் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கோவை தோழர் V.புதியவன் உள்ளிட்ட உயிர் நீத்த தோழர்களுக்கு மாநில அமைப்புச் செயலர் தோழர் C.செல்வின் சத்தியராஜ் அஞ்சலி உரை நிகழ்த்தினார். மாநில பொருளர் தோழர் K.சீனிவாசன் வரவேற்புரை ஆற்ற, தோழர் P.இந்திரா தலைமையுரை நிகழ்த்தினார்.

மாநில செயலர் தோழர் S.செல்லப்பா மாநில செயற்குழுவிற்கான விவாதப் பொருளை அறிமுகப்படுத்தி அறிக்கையை சமர்ப்பித்தார்.

மாநில செயற்குழுவை நமது அகில இந்திய பொதுச்செயலர் தோழர் P.அபிமன்யு அவர்கள் எழுச்சியுரை ஆற்றி துவக்கி வைத்தார். ”இந்திய நாட்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்வு முடிவுகள் என்பது நவீன தாராளமய கொள்கையை அமலாக்கிய காங்கிரஸ் கட்சிக்கு இந்திய மக்கள் சரியான பாடத்தைப் புகட்டியுள்ளதை புரிந்துகொள்ளவேண்டும். தற்போது ஆட்சிக்கு வந்துள்ள BJPயும் இதே தாராளமய கொள்கையை தொடர்ந்து அமலாக்குமானால் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட கதிதான் BJPக்கும் ஏற்படும். இந்திய உழைப்பாளி வர்க்கம் தொடர்ந்து இந்த தாராள மய கொள்கைகளை எதிர்த்து போராட வேண்டும். அதில் BSNL ஊழியர் சங்கமும் தனது பங்கினை கண்டிப்பாக செலுத்தும்” என்று பொதுச்செயலர் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மேலும் BSNL நிறுவனம் சந்திக்கும் சவால்கள், ஊழியர் பிரச்சனைகளில் நமது மத்திய சங்கத்தின் தலையீடும் தீர்வுகளும் மற்றும் நமது சங்கத்தை பலப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் எடுத்துரைத்தார். சென்னை தொலைபேசி மாநிலச்செயலர் தோழர் K.கோவிந்தராஜ் மற்றும் தமிழ்நாடு ஒப்பந்த தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலர் தோழர் C.வினோத்குமார் ஆகியோர் செயற்குழுவை வாழ்த்தி பேசினர். மாநில செயற்குழு உறுப்பினர்கள் 41 தோழர்களில் 40 தோழர்கள் கலந்து கொண்டது சிறப்பு அம்சமாகும். விவாதத்தில் 27 தோழர்கள் கலந்து கொண்டனர்.

கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1. சமீபத்தில் நடைபெற்ற சொசைட்டி இயக்குநர் தேர்தலில் கோடிக்கணக்கில் பணத்தை செலவு செய்து வீரராகவன் - NFTE கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. சென்னையில் நடந்த குதிரை பேரத்தில் BSNL ஊழியர் சங்க கூட்டணி RGBக்கள் விலை போகாமல் நமது Panelக்கு முழுமையாக வாக்களித்ததை இந்த மாநில செயற்குழு மனதார பாராட்டுகிறது. பணத்தை விட கொள்கையே பிரதானம் என்ற கோட்பாட்டை ஏற்று Panelக்கு வாக்களித்த நமது RGBக்களை எத்தனை முறை பாராட்டினாலும் தகும்.

2. மத்திய சங்கத்திற்கு அளிக்க வேண்டிய நிதியான ரூ100/-ஐ ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் வசூலித்து மாவட்ட சங்கங்கள் கண்டிப்பாக உடனடியாக அனுப்ப வேண்டும்.

3. மாவட்ட மாநாடுகளை செப்டம்பர் 15க்குள் மாநில மையத்தோடு கலந்துபேசி வெற்றிகரமாக நடத்திட வேண்டும்.

4. மாநில மாநாட்டை 2014, அக்டோபர் 10,11,12 ஆகிய தேதிகளில் திருச்சியில் எழுச்சியுடன் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது. மாநில மாநாட்டை நடத்துவதற்கான நிதியை நமது உறுப்பினர்களிடமிருந்து தலா ரூ.250/- வீதம் கண்டிப்பாக வசூலித்து மாநில சங்கத்திற்கு செப்டம்பர் 10ம் தேதிக்குள் அனுப்பிட வேண்டும். இந்த முறையும் மாநில மாநாடு சார்பாளர்களை மட்டுமே வைத்து நடத்தப்படும். முதல் நாள் மட்டும் வழக்கம் போல் அனைத்து ஊழியர்களும் கலந்துகொள்ளும் விதமாக பொதுஅரங்கு, கருத்தரங்கம் நடத்தப்படும். இரண்டாவது மற்றும் மூன்றாவது நாட்கள் சார்பாளர்கள் மாநாடாக நடைபெறும்.

5. ஜூலை மாதத்தில் உறுப்பினர் சேர்க்கையை அனைத்து மாவட்டங்களிலும் வலுவாக நடத்திட வேண்டும்.

6. தமிழகத்தில் ஊழியர் பிரச்சனைகளில் தீர்வு, ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனைகளில் தீர்வு ஆகியவற்றில் மாவட்ட, மாநில நிர்வாகத்தின் போக்கில் அலட்சிய போக்கு தென்படுவது கவலைக்குரிய விஷயமாகும். பல மாவட்ட நிர்வாகங்கள் ஊழியர் பிரச்சனைகளை நமது மாவட்ட சங்கங்கள் கொண்டு சென்றால் அதை தீர்ப்பதற்கு மாறாக தட்டிக்கழிக்கும் போக்கு தென்படுகிறது. பல பொது மேலாளர்கள் கூடுதல் மாவட்டங்களை பொறுப்பாக பார்ப்பதால் சங்கத்தை சந்திப்பதை தவிர்க்கின்றனர். மாநிலச்சங்கம் மூலமாக மாநில

நிர்வாகத்திலிருந்து தலையிட்டாலும் ஊழியர் பிரச்சனைகளை தீர்ப்பது இல்லை. இந்த நிலையை மாநில நிர்வாகமும் புரிந்து கொண்டு செயலாற்றாமல் அலட்சிய போக்கை கடைபிடிப்பதை ஒருபோதும் நாம் ஏற்கமுடியாது. தமிழகத்தில் கடைபிடிப்பதை ஒருபோதும் நாம் ஏற்கமுடியாது. தமிழகத்தில் BSNL வளர்ச்சிக்கு தொடர்ந்து நிர்வாகத்தோடு நாம் ஒத்துழைப்பு கொடுத்து வருகிறோம். நம்முடைய உழைப்பில்லாமல் BSNL தமிழகத்தில் சிறந்த சேவையை கொடுக்க முடியாது. மாநில/ மாவட்ட நிர்வாகங்களின் அலட்சிய போக்கினைக் கண்டித்தும், ஊழியர் பிரச்சனைகளில் தீர்வு, ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு ஆகியவற்றை வலியுறுத்தி மாநில அளவில் சக்திமிக்க இயக்கம் நடத்துவது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

**இயக்கங்கள்**

1. 04.07.2014 அன்று மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்.
2. 11.07.2014 அன்று மாவட்ட தலைநகரங்களில் தர்ணா போராட்டம்.

7. 2013 ஜனவரி முதல் டிசம்பர் 2013 வரையிலான தணிக்கை செய்யப்படாத வரவு செலவு கணக்குகளை மாநில பொருளர் தோழர் K.சீனிவாசன் சமர்ப்பித்தார். மாநில செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

8. அடுத்த மாநில செயற்குழுவை விருப்பம் தெரிவிக்கும் மாவட்டத்தில் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

இறுதியாக நமது பொதுச்செயலர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மாநில செயற்குழு உறுப்பினர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு விளக்கமளித்து உரையாற்றினார். மாநில செயலர் தோழர் S.செல்லப்பா தொகுப்புரை ஆற்றினார். மாநில உதவி தலைவர் தோழர் L.பரமேஸ்வரன் நன்றி கூறினார்.

தோழமையுடன்,

**(S.செல்லப்பா)**

மாநிலச்செயலர்.

**சென்னை மாநிலச் செயற்குழு (17.06.2014)**

**தீர்மானம் - 1**

**<u>நிர்வாகத்தின் அலட்சியப் போக்கினை கண்டித்து….</u>**

தமிழகத்தில் ஊழியர் பிரச்சனைகளில் தீர்வு, ஒப்பந்த ஊழியர் ஊதியம் உள்ளிட்ட பிரச்சனைகளில் தீர்வு ஆகியவற்றில் சமீப காலமாக மாவட்டங்களிலும், மாநிலத்திலும் நிர்வாகத்தின் போக்கில் அலட்சியப் போக்கு தென்படுவது கவலைக்குரிய விஷயமாகும். தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட முதன்மைச் சங்கமான BSNL ஊழியர் சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளைக் கூட தீர்க்காமல் இழுத்தடிக்கும் போக்கினை நாம் ஒரு போதும் அனுமதிக்கமுடியாது. BSNL நிறுவனத்தில் அன்றாடம் பணிகளை திறம்பட செய்யக்கூடிய ஒப்பந்த ஊழியர்களுடைய பிரச்சனையை பேசமாட்டோம் என்ற புதிய நிலையை மாநில மாவட்ட நிர்வாகங்கள் சமீபத்தில் எடுக்கின்றன. தேசிய கவுன்சில், மாநில கவுன்சில் கூட்டங்களில் ஒப்பந்த ஊழியர் பிரச்சனைகளை இதுவரை தொடர்ந்து எழுப்பியுள்ளோம். இனியும் எழுப்புவோம். தமிழகத்தில் கடந்த 15 ஆண்டுகளாக சுரண்டப்படும் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஆதரவாக, சுரண்டலை தடுத்து நிறுத்திட நாம் போராடி வருவதை நிர்வாகம் மறுக்கமுடியாது. ஒப்பந்த ஊழியர்களுக்கு சம்பளம் காலதாமதமாக வழங்குவதை கண்டித்து உண்ணாவிரதம் இருந்த தருமபுரி மாவட்ட தோழர்களில் 32 பேருக்கு மாவட்ட நிர்வாகம் Dies-non கொடுத்திருக்கிறது. மாநில அளவில் இப்பிரச்சனையை கொண்டு சென்றும் எந்த முன்னேற்றமும் இல்லை. BSNL ஊழியர்களின் மருத்துவ பில்கள் மாநில நிர்வாகத்தால் திருப்பி அனுப்பப்பட்டு நிராகரிக்கப்படுகிறது. மாவட்ட அளவில் BSNL வளர்ச்சிக்கு தேவையான உபகரணங்கள் (Cable, Drop wire, Telephone Instruments, Modem, etc.) வேண்டும் என்று கோரிக்கை வைத்தால் கூட நிர்வாகத்திற்கு எரிச்சல் வருகிறது. இது நியாயமா?

எனவே சென்னையில் கூடிய மாநிலச் செயற்குழு இப்பிரச்சனையை ஆழமாக விவாதித்தது. மாநில, மாவட்ட நிர்வாகங்களின் அலட்சிய போக்கினை இந்த மாநிலச் செயற்குழு கண்டிகிறது.

**சென்னை மாநிலச் செயற்குழு (17.06.2014)**

**தீர்மானம் - 2**

மாநில, மாவட்ட நிர்வாகங்கள் ஊழியர் பிரச்சனைத் தீர்வில் அலட்சியம் காட்டுவதையும், ஒப்பந்த ஊழியர்களுக்கு சம்பளம் உட்பட ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்காமல் சங்கத்தோடு பேச மறுப்பதையும் நாம் இனியும் அனுமதிக்க முடியாது. ஒப்பந்த ஊழியர் சம்பளம் காலதாமதமாவதை கண்டித்து உண்ணாவிரதம் இருந்த தருமபுரி மாவட்ட தோழர்களில் 32 பேருக்கு Dies-non கொடுக்கப்பட்டிருக்கிறது. தருமபுரி மாவட்ட நிர்வாகம் போராடினால் பழிவாங்குவோம் என்ற நிலையை எடுக்கிறது. இதை முறியடிக்க நாம் மீண்டும் போராடுவோம் என்பதை நிர்வாகத்திற்கு புரியவைப்போம். அடக்குமுறைக்கு தொழிலாளி வர்க்கம் ஒருபோதும் அஞ்சியதில்லை என்பதை நிர்வாகத்திற்கு போராட்டம் மூலம் பதிலடி கொடுப்போம். எனவே தமிழ் மாநிலம் முழுவதும் எழுச்சிமிக்க இயக்கங்களை நடத்திட இந்த மாநிலச் செயற்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**இயக்கங்கள்**

1. 04.07.2014 அன்று மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்.
2. 11.07.2014 அன்று மாவட்ட தலைநகரங்களில் தர்ணா போராட்டம்.

மாநில செயற்குழு புகைகப்படங்கள்













